දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112694033, 0112675280
Telephone ) 0112675449

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපැල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය )
எனது இல ) MH/AD/01/09/Add.Se.(PHS)/2026
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி ) 2026.07. /12
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

# සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
# Ministry of Health & Mass Media

பொது சுற்றறிக்கை கடித இலக்கம்: 01 - 55 / 2026

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள் - தேசிய வைத்தியசாலை (கொழும்பு, கண்டி, காலி)
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள், விஷேட திட்டப் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழுள்ள சகல வைத்தியசாலைகளின் மற்றும் நிறுவனத் தலைவர்கள் அனைவருக்கும்.

**மேலதிக செயலாளர் (பொது சுகாதார சேவை) பதவி**
**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு**

01. இந்த அமைச்சின் மேலதிக செயலாளர் (பொது சுகாதார சேவை) பதவிக்கு, விண்ணப்பங்கள் கோருவதற்காக 2025.10.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 02 -163/2025 எனும் இலக்க பொதுச் சுற்றறிக்கை 2026.02.10 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டதுடன், 2014.10.11 ஆம் திகதிய 1883/17 எனும் இலக்க இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக்குறிப்பின் மற்றும் அதன் பின்னர் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட அத்தியாயம் V இல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி பதவிக்கான தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை மருத்துவ சேவையில் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்தைச் சேர்ந்த மருத்துவ அலுவலர்கள் மற்றும் பல் சத்திர சிகிச்சை மருத்துவ அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. அடிப்படைத் தகைமைகள்:

விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசி தினத்திற்கு தொடர்ச்சியாக சேவையில் உள்ள இலங்கை மருத்துவ சேவையின் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்தைச் சேர்ந்த அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் தரத்தைச் சேர்ந்த மருத்துவ அலுவலராக இருத்தல் அல்லது அதே தரத்தில் பதவி வகிக்கும் பல் சத்திர சிகிச்சை மருத்துவராக இருத்தல்.

02. சேவை விதிமுறைகளும் நிபந்தனைகளும்:

இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படும் மருத்துவ அலுவலர்கள் தனியார் மருத்துவ தொழிலில் ஈடுபட முடியாது

03. சம்பளத் திட்டம்:

(அ) இப்பதவிக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன்படி SL – 03 – 2025 சம்பள பிரிவின் படி நிலை I (ரூபா 156,000 – 12 X 4850 - 214,200 ) உரித்தாகும்.

(ஆ) பட்டப்பின்படிப்பு பட்டத்தகைமைகளைக்கொண்ட மருத்துவ நிர்வாக தர அலுவலர்களுக்கு மாதாந்தம் ரூபா 6000/- வீதம் மருத்துவ நிருவாக படிக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

04. ஆட்சேர்ப்பு முறை:

(அ) அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெற்றிடம் நிரப்பப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையில் பயன்படுத்தப்படும் புள்ளித் திட்டம் இணைப்பு 1 என இணைக்கப்பட்டுள்ளது.

05. விண்ணப்பிக்கும் முறை:

(அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2026**.07.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகள்/விஷேட திட்ட பணிப்பாளர்கள் ஊடாக **செயலாளர், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, "சுவசிறிபாய", 385, சங்கைக்குரிய விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு** 10 எனும் முகவரிக்கு **பதிவு தபால் மூலம்** அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் முனையில் விண்ணப்பிக்கும் பதவிப்பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) தமது விண்ணப்பத்தை திரும்பப்பெற விரும்பினால், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் இருந்து 01 வாரங்களுக்குள் எனக்கு அறிவிப்பதன் மூலம் திரும்ப பெற முடியும்.

06. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2014.10.11 ஆம் திகதிய 1883/17 எனும் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்ட இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் அதில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்த ஏற்பாடுகள், அரசாங்க பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிக் கோவை பாகம் I இன் பொது நிபந்தனைகள் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றுக்கு உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

07. இந்த அறிவித்தலில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் இருந்தால், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கொள்ளப்படும்.

08. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்திற்கு அடிப்படை தகைமைகள் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கடமையை பொறுப்பேற்கும் தினம் நியமன தினமாக கருதப்படும்.

பொது சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய,

விஷேட மருத்துவர் அனில் ஜாசிங்க
செயலாளர்
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

Dr. Anil Jasinghe
Secretary
Ministry of Health & Mass Media
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10

இணைப்பு I

மேலதிக செயலாளர் (பொது சுகாதார சேவைகள்) - பதவிக்கான புள்ளிகள் வழங்கும் முறை

| | அளவுகோல்கள் | புள்ளி |
|---|---|---|
| 01 | சேவைக் காலம்<br><br>சிரேஷ்ட மருத்துவ நிர்வாகச் சேவை தரத்தில் தொடர்ச்சியான சேவைக் காலத்திற்கு 20 புள்ளிகள் (SL-1 I தரம்)<br>(தொடர்ச்சியான சேவையின் ஒவ்வொரு ஆண்டிற்கும் 04 புள்ளிகள் வீதம்)<br><br>I. பிரதிப் பணிப்பாளர் நாயகம் தரத்திற்கு (SL-3)<br>(தொடர்ச்சியான சேவையின் ஒவ்வொரு ஆண்டிற்கும் 05 புள்ளிகள் வீதம்)<br><br>குறிப்பு:<br><br>ஒரு ஆண்டிற்கும் குறைவான சேவைக் காலத்திற்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்:<br><br>அ) 09 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்திற்கு – மேற்கண்ட புள்ளிகளின் ¾ (நான்கில் மூன்று பங்கு)<br><br>ஆ) 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்டதும், 09 மாதங்களுக்கும் குறைவான சேவைக் காலத்திற்கு – மேற்கண்ட புள்ளிகளின் ½ (அரைப் பங்கு)<br><br>இ) 03 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்டதும், 06 மாதங்களுக்கும் குறைவான சேவைக் காலத்திற்கு – மேற்கண்ட புள்ளிகளின் ¼ (நான்கில் ஒரு பங்கு)<br><br>ஈ) 03 மாதங்களுக்கும் குறைவான சேவைக் காலத்திற்கு – எந்தப் புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. | 40 புள்ளிகள் |
| 02 | **கல்வித் தகைமைகள்**<br><br>I. மருத்துவ கலாநிதிப் பட்டம் (மருத்துவ நிர்வாகம் / சமூக மருத்துவம்) – சபைச் சான்றிதழுடன் – 10 புள்ளிகள்<br><br>II. மருத்துவ கலாநிதிப் பட்டம் (மருத்துவ நிர்வாகம் / சமூக மருத்துவம்) – சபைச் சான்றிதழ் இன்றி – 05 புள்ளிகள் | 10 புள்ளிகள் |
| 03 | **மேலதிக தகைமைகள்** | |
| | I. சேவை அனுபவம்<br>(தொடர்ச்சியான சேவையின் ஒவ்வொரு ஆண்டிற்கும் 02 புள்ளிகள் வீதம்)<br><br>குறிப்பு:<br><br>2014.10.11 ஆம் திகதிய இல. 1883/17 கொண்ட இலங்கை மருத்துவ சேவைப் பிரமாணக் கோவையின் இணைப்பு IV மற்றும் அதற்குப் பின்னர் காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட திருத்தங்களின்படி, பொது சுகாதாரச் சேவைப் பதவிகளில் வகித்த பதவிகளுக்கான சேவை அனுபவத்திற்குப் புள்ளிகள் வழங்கப்படும். (இதற்காக நியமன அதிகாரியால் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.) | 10 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| | பதவியுடன் தொடர்புடைய துறைசார் திட்டங்கள் (ஒவ்வொரு திட்டத்திற்கும் 03 புள்ளிகள் வீதம் அதிகபட்சமாக 05 திட்டங்களுக்கு 15 புள்ளிகள் வழங்கப்படும்.)<br><br>(அ) இணைப்பு I (I)-இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு அளவுகோல்களின் அடிப்படையில் திட்டங்கள் மதிப்பிடப்படும்.<br><br>(ஆ) விண்ணப்பத்துடன் திட்டங்களின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கும் போது, அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.<br><br>(இ) சிறப்புத் திட்டங்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது, இணைப்பு I (II)-இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்பற்றப்படும்.<br><br>குறிப்பு:<br>விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திட்டங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். | *15* புள்ளிகள் |
| | **II. பதவியுடன் தொடர்புடைய துறைசார் ஆய்வுகள் / வெளியீடுகள்**<br><br>(அ) ஆய்வுகள் / வெளியீடுகளை மதிப்பிடும் போது, இணைப்பு I (III)-இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு அளவுகோல்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.<br><br>(ஆ) விண்ணப்பத்துடன் ஆய்வுகள் / வெளியீடுகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கும் போது, அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகள் / வெளியீடுகள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.<br><br>(இ) ஆய்வுகள் / வெளியீடுகளுக்குப் புள்ளிகள் வழங்கும் போது, இணைப்பு I (IV)-இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்பற்றப்படும். | *15* புள்ளிகள் |
| *04* | **நேர்முகத் தேர்வில் செயல்திறன்**<br><br>(அ) தொடர்பாடல் திறன்கள் – 02 புள்ளிகள்<br>(ஆ) ஆளுமை – 02 புள்ளிகள்<br>(இ) தொழில்முறை ஒழுக்கம் – 02 புள்ளிகள்<br>(ஈ) தலைமைத்துவம் – 02 புள்ளிகள்<br>(உ) முடிவெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு திறன்கள் – 02 புள்ளிகள் | *10* புள்ளிகள் |
| | **மொத்த புள்ளிகள்** | *100* |